தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


FRANCE TEDC -FRANCE

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2024

FRANCE TEDC -FRANCE

## வளர்தமிழ் 5

நேரம்: 150 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

**அலுவலகப் பயன்பாட்டுக்கு**

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 05 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 10 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

FRANCE TEDC -FRANCE
FRANCE TEDC -FRANCE

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. பாவேந்தர் கல்வியின் தேவையை வலியுறுத்தி எழுதிய நூல் ________________ .

( குடும்பவிளக்கு, இருண்டவீடு, அழகின்சிரிப்பு )

2. பூம்புகார் அங்காடி பற்றிய செய்தி ________________ என்ற நூலில் காணப்படுகின்றது.

FRANCE TEDC - FRANCE

( நாலடியார், திருக்குறள், சிலப்பதிகாரம் )

3. ஒலிம்பிக் ______________ ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்.

( நான்கு, ஆறு, மூன்று )

4. காலித்தல் என்பது ________________

( மறைதல், எழுதல், நீக்கல் )

5. வாள் + போர் = ________________

( வாள்போர், வாற்போர், வாட்போர் )

FRANCE TEDC - FRANCE

6. ஆழமற்ற கடல் நீர் ஏரியைக் ________________ என்பர்.

( ஓடை, களப்பு , குடா )

7. தோட்டத்தில் திராட்சைப்பழங்கள் ________________ க் காய்த்திருந்தன.

( கூட்டங்கூட்டமாக, சீப்புச்சீப்பாக, குலைகுலையாக )

8. ஓநாய் ஊளையிடும். அதுபோல மான் ________________ .

( உறுமும், குய்யிடும், முழாங்கும் )

9. **குறள்:**

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் ________________

( புகழும், மகிழும், தொழும் )

FRANCE TEDC -FRANCE

10. ________________ என்றும் உண்மை பேச வேண்டும்.

( உங்கள், நாங்கள், எங்கள் )

11. நூல்களைத் திரித்து ஆடைகளை நெய்பவர் ________________ .

( நெசவாளர், குயவர், பொற்கொல்லர் )

12. அறநூல்களில் சிறந்தது திருக்குறள். ________________ மாந்தர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களைக் கூறுகிறது.

( அது, அவை, உது )

FRANCE TEDC -FRANCE

13. காடுபடு செல்வங்களில் ஒன்று ________________ .

( மயிற்பீலி, அரிசி, கூலங்கள் )

14. க் ங் ச் என்பன ________________

( உயிர்எழுத்துகள், மெய்எழுத்துகள், உயிர்மெய்எழுத்துகள் )

15. இடம் என்பதன் எதிர்ச்சொல் ____________ .

( நுனி, காலை, வலம் )

16. நான் விளையாட்டுத்திடலில் விளையாடினேன். நீ விளையாட்டுத்திடலில் ____________ .

( விளையாடினாய், விளையாடுகின்றார்கள், விளையாடினீர்கள் )

FRANCE TEDC -FRANCE

17. தொலைவரியைக் கண்டுபிடித்தவர் ____________ .

( கலிலியோ, மோர்சு, கிரகம்பெல் )

18. **விடுகதை:**

ஊருக்கு நடுவே உயர்ந்து நிற்கும்; உருவங்கள் பலவும் தாங்கி நிற்கும்; உச்சியில் குடம் தரித்திருக்கும். அது ____________ .

( மணி, விளக்கு, கோபுரம் )

19. கண்பார்வை அற்றோர் கூடக் கண்டுணரும் கலை ____________ .

( சிற்பக்கலை, ஓவியக்கலை, ஆடற்கலை )

FRANCE TEDC -FRANCE

20. கலப்புச் சுவையுடையது ____________ .

( மிளகாய், கரும்பு, தக்காளிப்பழம் )

21. ஒலிம்பிக் போட்டியின் முத்திற நோக்கங்களில் ஒன்று ____________ .

( உயர்வு, பணிவு, தாழ்வு )

22. **பழமொழி:**

____________ சொல்லிக் கெட்டவன் இல்லை.

( பொய், உண்மை, நேர்மை )

23. ‘‘வரப்புயர’’ என்று மன்னனை வாழ்த்தியவர் ____________ .

( பாவேந்தர், கபிலர், ஔவையார் )

24. குழலி நூலைப் ____________ முடித்தாள்.

( படித்து, படித்த, படிக்க )

25. மாந்தனால் செய்யமுடியாத புதுமையான கூட்டைக் கட்டும் பறவை ____________ .

FRANCE TEDC -FRANCE

( குயில், தூக்கணாங்குருவி, தீக்கோழி )

26. பாலாவி ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஈச்சுரம் ____________ .

( கோணேச்சுரம், இராமேச்சுரம், கேதீச்சுரம் )

27. வன்னியில் இனியா ____________ இன்றித் தனியே வாழ்கின்றாள்.

( உற்றார்உறவினர், இன்பதுன்பம், அல்லும்பகலும் )

28. தொலைத்தொடர்புக் கருவிகள் அற்ற காலத்தில் தூதாக அனுப்பப்பட்ட பறவை ____________ .

FRANCE TEDC -FRANCE

( மயில், புறா, வாத்து )

29. 90 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ____________ .

( தொண்நூறு, தொன்நூறு, தொண்ணூறு )

30. ஆடற்குல ஆண்களை ____________ என அழைப்பர்.

( விறலியர், கூத்தர், இடையர் )

புள்ளிகள் 30

2) அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.

1. நான் மாமாவுடன் ____________________ ச் சென்றேன். நான் ____________________ விளையாட்டுப் பொருட்கள் வாங்கினேன்.

( அங்காடி )

FRANCE TEDC -FRANCE

2. தமிழர் ____________________ சிறந்து விளங்கினர். அவர்கள் ____________________ அறுபத்துநான்காக வகுத்தனர்.

( கலைகள் )

3. அதியர்மான் ____________________ அரண்மனைக்கு அழைத்தான். அவன் ____________________ நெல்லிக்கனியைக் கொடுத்தான்.

( ஔவையார் )

FRANCE TEDC -FRANCE

4. நண்பன் ____________________ ச் சுற்றுலாச் சென்றான். அவன் ____________________ மாவீரர் துயிலும் இல்லங்களைப் பார்த்தான்.

( தாயகம் )

5. தைப்பொங்கல் ____________________ கொண்டாடப்படுகிறது. அது ____________________ திருநாள்.

( தமிழர் )

புள்ளிகள் 10

## 3) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து எழுதுக.

| | | |
|---|---|---|
| வீசிய | செல்லும் | விளைந்த |
| புகழ்ந்து | இசையொலி | |

FRANCE TEDC -FRANCE

1. வளவன் வீட்டுக்குச் ________________ வழியில் நண்பனைக் கண்டான்.

2. விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற சிறுவர்களை எல்லோரும் ________________ பாராட்டினர்.

3. வில்லில் நாணை ஏற்றியபோது ________________ எழுந்தது.

4. உழவர்கள் வயலில் ________________ நெல்லை அறுவடை செய்தனர்.

FRANCE TEDC -FRANCE

5. நேற்று பலமாக ________________ காற்றினால் மரங்கள் முறிந்தன.

புள்ளிகள் 05

## 4) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. பனைமரத்திலிருந்து ____________________ பழம் கீழே விழுந்தது.

   ( பணம், பனம் )

2. தொடர்ந்து பெய்த மழையினால் ____________________ பாய்ந்து ஓடியது.

   ( வெள்ளம், வெல்லம் )

FRANCE TEDC -FRANCE

3. வீட்டுக் ____________________ யில் சேவல் நிற்கின்றது.

   ( கூறை, கூரை )

4. ஆழம் ____________________ காலை விடாதே.

   ( அறியாமல், அரியாமல் )

5. பலாச் ____________________ மிகவும் சுவையானது.

   ( சுழை, சுளை )

FRANCE TEDC -FRANCE

புள்ளிகள் 05

## 5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| அம்பு | மரத்தின் | சேர்ந்து |
|---|---|---|

| அன்னம் | வேட்டையாட |
|---|---|

ஓர் ஆற்றில் ________________ ஒன்று வாழ்ந்து வந்தது. அந்த அன்னம் ஒரு புறாவுடன் நட்பாக இருந்தது. அவை இரண்டும் ________________ மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன. ஒருநாள் வேட்டைக்காரன் ஒருவன் அங்கு ________________ வந்தான். அவன் அங்குமிங்கும் அலைந்து திரிந்தான். அவனுக்கு விலங்குகளோ பறவைகளோ கிடைக்கவில்லை. அவன் களைப்பினால் ஒரு ________________ கீழ் இருந்தான். அப்போது ஆற்றில் நீந்திக் கொண்டிருந்த அன்னத்தைக் கண்டான். அவன் அன்னத்துக்கு ________________ எய்ய, குறி பார்த்தான். இதைக் கண்ட புறா உடனே பறந்து சென்று அன்னத்தைக் காப்பாற்றியது.

FRANCE TEDC -FRANCE
FRANCE TEDC -FRANCE

புள்ளிகள் 10

### 6) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

இன்று நம் வீடுகளில் மின்குமிழ்கள் ஒளிர்கின்றன. ஆனால் பலநூற்றாண்டுகளுக்கு முன் இந்த மின்குமிழ்கள் இல்லை. தோமசு அல்வா எடிசன் அமெரிக்காவில் வாழ்ந்தார். எடிசன் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மின்குமிழைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்தார். தனது முதல் முயற்சியில் தோல்வியைக் கண்டார். பல முறை முயன்றும் தோல்வியைக் கண்ட அவர் இறுதியில் வெற்றி பெற்றார். எடிசனின் தொடர் முயற்சியினால் மின்குமிழ் கண்டுபிடிக்கப்பட்டது. நியூயோக் நகரத்தில் முதன்முதலில் மின்குமிழ் ஒளிரத் தொடங்கியது. ‘‘முயற்சி திருவினையாக்கும்’’ என்ற பழமொழிக்கு இணங்க எடிசன் வெற்றி பெற்றார்.

FRANCE TEDC -FRANCE

1. தோமசு அல்வா எடிசன் எங்கே வாழ்ந்தார்?

_______________________________________________

2. எடிசன் எத்தனையாம் நூற்றாண்டில் மின்குமிழைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்தார்?

_______________________________________________

FRANCE TEDC -FRANCE

3. மின்குமிழைக் கண்டுபிடித்தவர் யார்?

_______________________________________________

4. எந்நகரத்தில் முதன்முதலில் மின்குமிழ் ஒளிரத் தொடங்கியது?

_______________________________________________

5. இங்கு வந்துள்ள பழமொழியை எழுதுக.

_______________________________________________

புள்ளிகள் 10

## 7) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. ஊட்டச்சத்துகளில் இரண்டைத் தருக.

2. எந்தத் தட்ப வெப்ப சூழலிலும் தான் வாழும் மண்ணைவிட்டு வேறு எங்கும் போகாத பறவை எது?

FRANCE TEDC -FRANCE

3. ஆடற்கலையின் இரு பெரும்பிரிவுகளும் எவை?

4. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற பாடம் எதனை விளக்குகின்றது?

5. குறிஞ்சியும் முல்லையும் தம் இயல்பில் திரிந்ததால் தோன்றிய நிலம் எது?

FRANCE TEDC -FRANCE

6. மக்களைக் கவரும் விந்தையான விலங்குகள் எங்கே கூடுதலாகக் காணப்படுகின்றன?

7. பாவேந்தர் யாருடைய கவிதைகளால் ஈர்க்கப்பட்டார்?

புள்ளிகள் 10

**8) தரப்பட்டுள்ள சொல்லியங்களை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

1. என் நண்பி ஓவியம் வரைந்தாள்.

______________________________________________ .

2. கோடைகாலத்தில் பறவைகளின் ஒலி கேட்கும்.

______________________________________________ .

FRANCE TEDC -FRANCE

3. பாட்டி என்மீது அன்பாக இருப்பார்.

______________________________________________ .

4. சிறுவர்கள் கடலில் நீந்தி விளையாடினர்.

______________________________________________ .

5. எனது வீட்டுத்தோட்டம் அழகானது.

______________________________________________ .

புள்ளிகள் 05

FRANCE TEDC -FRANCE

9) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ நோயற்ற வாழ்வு
- ✸ நானிலத்தில் முல்லை
- ✸ எனது பெற்றோர்

FRANCE TEDC -FRANCE

- ✸ கோடைகாலம்

புள்ளிகள் 15

FRANCE TEDC -FRANCE

FRANCE TEDC -FRANCE

FRANCE TEDC -FRANCE

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

FRANCE TEDC -FRANCE

FRANCE TEDC -FRANCE